மெய்ஞ்ஞானக்கொடி

# இந்து வேதம்

மெய்ஞ்ஞானக்கொடி

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

இந்நிலவுலகில் முதன்முதல் பிறந்த மனித இனம் தமிழினமே!


**ஐப்பசி மாத வெளியீடு (Oct-Nov 2014)**

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,115


# மெய்யான இந்துமதமும்
# பொய்யான ஹிந்துமதமும்



"சமயம் என்பது மனித நாகரிகத்தின் வரலாறு ஆகும்."

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்
## அவர்கள் அருளியவை

காணிக்கை ரூ.10/-

# உள்ளுறை

**1. தமிழின மறுமலர்ச்சிப் போர் - கட்டுரை.**

**2. மெய்யான இந்துமதம் - *பொய்யான ஹிந்துமதம்* வேற்றுமை விளக்கக் கட்டுரை.**

(குருதேவர் அவர்கள் எழுதிய அனைத்து அஞ்சல்களும் விளக்கமாக கையெழுத்துப் பிறதிகளாகவோ, வேறு விதங்களில் நகல்கள் தயாரித்தோ தாம் எழுதிய அஞ்சல்களை, கட்டுரைகளைப் பிறருக்குப் படிக்கக் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதை எடுத்துக் காட்டுகின்றன. இதன் அடிப்படையிலேயே **பூசையாக, தவமாக, குருகாணிக்கையாக ..... 'இந்து வேதம்' என்ற தலைப்பில் குருதேவர் எழுதியவை பலருக்கும் நகல்களாக அனுப்பப் படுகின்றன**. குருதேவர் எழுதிய அஞ்சல்கள், கட்டுரைகள் உடையவர்கள் அவற்றை நகல்கள் எடுத்து இதுபோல் பலருக்கும் அனுப்புமாறு இந்தத் தருணத்தில் மீண்டும் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.)

*"அஞ்சி அஞ்சி வாழ்தலும், கெஞ்சிக் கெஞ்சி வாழ்தலும் நிலையற்றன மட்டுமல்ல; பயனற்றனவாகும்."*

*- சித்தர் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை.*

# அருட்கேணி நீர்க் குவளைகள்.......!

# தமிழின மறுமலர்ச்சிப் போர்

## The War of the Tamilian Renaissance

நண்ப! 'தமிழர்களின் ஒற்றுமையின்மையும், இனப்பற்றின்மையும்தான், தமிழின மறுமலர்ச்சிப் பணியை நிறைவு செய்யவில்லை!!' என்றோர் கருத்து நிலவுகிறது. இது தவறு. மாபெருந் தவறு. பல்வேறு மொழியினர் தங்களைத் தமிழர்களாக ஆக்கிக் கொண்டு தமிழகத்தில் வாழுகின்ற காரணத்தால் இனப்பற்றும் ஒற்றுமையும் உருவாகிட உதவிடும் 'மொழிப்பற்று' நீரின்றி வாடிக் கருகிடும் பயிர் போன்று ஆகிவிட்டது. அதாவது, தமிழ்மொழி அறிவு, தமிழ் மொழியின் சிறப்பு, தமிழ் மொழியின் காலத்தொன்மை, இலக்கிய வளம், ....... முதலியவற்றில் தமிழர் மனம் ஈடுபட்டிடாமல் பிறமொழியினர் கெடுத்துத் தடுத்து வருகின்றனர்.

தமிழர்களாக இருப்பவர்கள் பிற மதங்களில் ஈடுபாடு கொண்டிட்ட போதும் தமிழ் மொழியின் பெருமைகளையும், உரிமைகளையும் போற்றிப் பேணித்தான் வருகின்றார்கள். ஆனால் பணம், பதவி, பட்டம், அதிகாரம் ..... முதலியவற்றை நாடித் திரியும் *அரசியல்வாதிகள்தான்* மிகக் கொடியவர்களாக, கேடுகெட்டவர்களாக, துரோகிகளாக, ... வாழ்ந்து தமிழ்மொழியின் எல்லாப் பெருமைகளையும் உரிமைகளையும் கொன்று வருகிறார்கள்.

> *அரசியல்வாதிகளால்தான் தமிழின மறுமலர்ச்சி அழிக்கப் படுகின்றது.*

அத்துடன் இவர்களே தமிழினம் என்ற ஒன்று கற்பனையோ? என்று ஐயுறும் வண்ணம் இனப்பாரம்பரிய உணர்வினைச் சிதைத்தும், சீரழித்தும் செயல்படுகின்றுர்கள். இவர்கள்தான் ஆங்காங்கு மழலைமொழி பேசும் தளிர் நடைக் குழந்தைகளாக வளரும் தமிழினப் பற்றுக்கும் ஒற்றுமைக்கும் உரிய முயற்சிகளையும், அதற்குரிய இயக்கங்களையும், இயக்க வீரர்களையும் ஈவு இரக்கமின்றிக் கழுத்தை நெறித்துக் கொன்று விடுகிறுர்கள். இந்த *கொலைகார அரசியல்வாதிகளிடமிருந்து* தமிழின உணர்வுகளை, தமிழினப் பற்றுக்கும் ஒற்றுமைக்கும் உரிய முயற்சிகளை, தமிழ்மொழியின் வளத்தையும், பெருமைமிகு வரலாற்றையும் விளக்கிடும் இலக்கியங்களை, இலக்கிய உணர்வுகளை, இலக்கியம் போற்றும் இயக்கங்களை, ...... உடனடியாக காப்பாற்றியாக வேண்டும். அதற்குரிய காப்பகமாகச் **சமயத்தையும், சமயம் சார்ந்த மரபுகளையுமே** பயன்படுத்த வேண்டும்.

*தமிழர் மத வழியில்தான் தமிழின மறுமலர்ச்சிப் போர் வெற்றி பெறும்.*

எனவேதான், நாம்,

**'சமய வளர்ச்சியே சமுதாய வளர்ச்சி',**

**'சமயமே இன ஒற்றுமையையும், பற்றையும் செழிக்கச் செய்யும்',**

**'சமயமே மொழியுணர்வையும் இலக்கிய அறிவையும் வளப்படுத்தும்',**

**'சமயமே வீட்டையும் நாட்டையும் வடிவப்படுத்தும்',**

**'சமயமே மாபெரும் உரிமைப் போருக்குரிய மாவீரர்களையும் சூழ்நிலைகளையும் உருவாக்கும்',**

**'சமயமே தனி வீரர்களுக்கும் படைக்குமுரிய பயிற்சிகளை அளிக்க வல்லது',**

**'சமயமே மறுமலர்ச்சிப் பணிக்கு உயிர்'**

...... என்ற கருத்துச் சொற்றுெடர்களை போர்க் கருவிகளாக வழங்குகிறோம். இதனுல் ஒவ்வொரு தனி மனிதனும் தமிழின மறுமலர்ச்சி போரைத் தலைமை தாங்கி நடத்தும் தரமும் உரமும் திறமும் பெற்றவனுகி விடுகிறுன்.

தமிழின விழிச்சி ஏறத்தாழ நூற்ருண்டுக்குப் பல தடவை ஏற்பட்டுக் கொண்டேதானிருந்து வருகிறது என்பதை வரலாற்றுச் செய்திகள் தெளிவாக விளக்குகின்றன. கி.மு. முதல் நூற்ருண்டில் ஆரியர் தமிழினத்தை வீழ்த்தி மதுரை மாநகரைக் கொள்ளையிட்டு, மதுரைத் தமிழ்ச் சங்க நூல்களை எரித்து, நாடெங்குமிருந்த தமிழ்ப்புலவர்களை ஈவு இரக்கமின்றிக் கொலை செய்து வெறியாட்டமாடினர். ஆரியர்கள் மிக எச்சரிக்கையாக அரசு கட்டிலிலும், ஆட்சித்துறைகளிலும், ஆலயங்களிலும், சமயச் சாத்திரச் சடங்குகளிலும், கல்வித்துறைகளிலும் மிகத் திறமையாகத் தங்களின் சமசுக்கிருத மொழியை ஆதிக்கம் பெறச் செய்திட்டனர்.

*தமிழர்களின் ஆலயங்களையும், சமயச் சடங்குகளையும் ஆளுவது பிறமண்ணினர்களே*

குறிப்பாகச் சமசுகிருத மொழியை ‘கடவுள் மொழி’, ‘தெய்வ மொழி’, ‘மந்திர மொழி’, ‘பூசை மொழி’, ‘சாத்திரங்கள் நிறைந்த மொழி’ ..... என்று பாமரர் முதல் படித்தவர் வரை நம்பும்படிச் செய்தனர். அதன்மூலம் அம்மொழிக்குரிய ஆரியர்கள் உயர்ந்தவர்களாகவும், அவர்களுடைய பண்பாடு, நாகரீகம், இலக்கியம் ...... முதலியவை உயர்ந்தவையாகவும் கருதப்படும் ஓர் எண்ண ஓட்டத்தை உருவாக்கினுர்கள். இந்த எண்ண ஓட்டத்தால் தமிழினம் ஆரிய இனத்திடம் அடிமையாயிற்று.

*இதுதான் ஆரிய மாயை! அன்னிய மோகம் இதுவே.*

இந்த அடிமை வலையை அறுத்தெறிய இரண்டாயிரமாண்டுகளாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த **ஆரிய மாயை** என்னும் இருளை அகற்ற இரண்டாயிரமாண்டுகளாக முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆரிய முதலையின் வாயிலிருந்து தமிழினத்தை விடுவிக்கும் முயற்சி இரண்டாயிரமாண்டுகளாக நடைபெற்று வருகின்றது.

ஆரியரை எதிர்த்து தமிழின விடுதலைப் போரை இன்றைய திருச்சி மாவட்டக் கருவூர் பசுபதீசுவரர் கோயிலில் நிறைவு கொண்டுள்ள பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரூர் (கி.மு.100 முதல் கி.பி.150 வரை) ஆரம்பித்தார். அம் முயற்சியின் ***செயல் வடிவாக*** மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், திருஞான சம்பந்தர், சுந்தரர் ..... என்று அறுபத்து மூன்று நாயன்மார்களும், பன்னிரண்டு ஆழ்வார்களும், தொகையடியார்களும் தொடர்ந்து செயல்படுத்தினர். இன்றைக்கு பகுத்தறிவுவாதிகள், நாத்திகர்கள், சமய வெறுப்பாளர்கள் ..... முதலியோர் கருதுவது போல் நமது சமயவாதிகள் பழமைவாதிகளாகவோ, மடமைவாதிகளாகவோ இல்லை. இவர்கள்தான் உண்மையான சீர்திருத்தவாதிகள், பகுத்தறிவு வாதிகள், புரட்சிவாதிகள், சமுதாய மாற்றப் போர்த்தளபதிகள். வேறு எந்த நாட்டுச் சமயவாதிகளும் சாதிக்காத அளவுக்குச் சமயத்தின் பெயரால் மாபெரும் சமுதாய மாற்றங்களைச் செய்திட்ட வரலாற்றுப் பெருந் தலைவர்களே நமது சமயவாதிகள்.

*முதலாம் நூற்றுண்டில் தமிழின மறுமலர்ச்சிப் போர்*

*ஆழ்வார்களும், நாயன்மார்களும் நிகழ்த்தியது தமிழின விடுதலைப் போரே!*

இப்பேருண்மை இந்த நூற்றுண்டில் உணரப்பட முடியாமல் போனதற்கு தந்தை பெரியார் ஈ.வெ.ரா அவசரக் கோலமாக, அரைகுறையாக இலக்கிய வரலாற்றுக் கருத்துக்களோடு ஆற்றிய சமுதாயச் சீர்திருத்தப் பணியேயாகும். இந்த மிகப் பெரிய தவற்றுக்குப் பரிகாரம் தேடும்போது தந்தை பெரியாரின் தன்னலமற்ற, துணிவு மிக்க, தளராத பகுத்தறிவுப் பணிகளையும் சீர்திருத்தப் பணிகளையும் சிதைவுறவோ சீரழிக்கவோ செய்து விடக் கூடாது. அவரால் எந்த அளவு பொதுப் பணி செய்ய முடிந்ததோ அது நடந்தேறி விட்டது என்ற அளவில் நாம் நிறைவு பெறல் வேண்டும். அப்பொழுதுதான் அவர் அரைகுறையாக விட்டவைகளையும், தவறுன

முடிவுகளெடுத்துப் பயனற்றுச் செயல் பட்டிட்டவைகளேயும், ....... சரி செய்து மேற்கொண்டு விரைந்தும் விரிந்தும் பணியாற்றிட முடியும் நம்மால்.

கடைச்சங்க வீழ்ச்சிக்குப் பிறகு பாலி மொழியும், சமசுகிருத மொழியும், பிராகிருத மொழியும், சமண மதமும், புத்த மதமும் முத்தமிழின் வீழ்ச்சியைத் தொடர்ந்து காத்துத் தமிழினம் தாழ்ச்சியிலிருந்து மீட்சி பெருமல் செய்திட்டன. அப்பொழுதுதான் முதலில் <u>மாணிக்க வாசகர்</u> தோன்றிப் <u>புத்த மதத்தையும், அது சார்ந்த பாலிமொழியையும் வென்றிட்டார்</u>. இரண்டாவதாகத் <u>திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும்</u> தோன்றிச் <u>சமண மதத்தையும், அவை சார்ந்த பிராகிருத மொழிச் செல்வாக்கையும் வென்றிட்டனர்</u>.

> *பிறமொழி ஆதிக்கத்தைத் தடுத்துத் தமிழைக் காத்தவர்கள் சமயக்குரவர் நால்வர்.*

இப்படி மிகப்பெரிய சீர்திருத்தவாதிகள், தமிழ்மொழியும் தமிழினமும் காத்த மாவீரர்கள், தமிழ்ப் பண்பாடும் தமிழ் நாகரீகமும் மாபெரும் வீழ்ச்சியடைந்திடாது தடுத்து நிறுத்திய புரட்சி வீரர்கள், ..... [என்ற] தகுதியினேயே திருவாசகத் தேவார ஆசிரியர்கள் பெற்றிடுகின்ருர்கள். இவர்களேத் தொடர்ந்தே மற்ற எல்லா நாயன்மார்களும், ஆழ்வார்களும் புரட்சி வீரர்களாக, சமுதாயத் தொண்டர்களாக, மொழிப்போர் இயக்கத் தலேவர்களாக, பண்பாடும் நாகரீகமும் காத்த மாவீரர்களாக, கற்கோயில்கள் கண்ட கலேஞர்களாக, சொற்கோயில்கள் அமைத்த மேதைகளாக, பேரறிஞர்களாக விளங்குகிருர்கள்.

ஆனுல், தந்தை பெரியாரின் ஆத்திரமான அவசரக் கோலச் சீர்திருத்த பணிகளால் நாயன்மார்களும், ஆழ்வார்களும், தொகையடியார்களும் மடமை வாதிகள், பழமை வாதிகள், ஆரிய அடிவருடிகள் .... என்ற கருத்துக்கள் இருள் போல் தமிழின எழுச்சி வரலாற்றில் கவிழ்ந்து விட்டன. இவற்றை எப்பாடு

பட்டாவது, நேரடியாகவே பெரியாரை விமர்சனம் செய்தாவது நலமாக்க வேண்டும், இருளை அகற்ற வேண்டும். பெரியாரால் விளைந்த தீமைகள், தவறுகள், பிழைபட்ட கருத்துக்கள், வரலாற்றுக் குழப்பங்கள் கண்டிக்கப் பட்டேயாக வேண்டும். இல்லாவிட்டால் நமது பணிகள் கடலில் பெருங்காயம் கலந்தது போல் மணமின்றி வீணாகிடும். உரிய பயனளிக்காமல் போய்விடும்.

*பெரியாரின் செயல்கள் பற்றிய சரியான நிலைப்பாடு தேவை*

நண்பா! தந்தை பெரியார் ஒரு படைப்பாற்றல் மிக்க மேதை (a creative genius); அதனால்தான் அவர் சமுதாய விழிச்சிக்காகத் தனி நபர்களையும் உறக்கத்திலிருந்து தட்டியெழுப்பும் பல போராட்ட திட்டங்களை ஈன்றெடுத்திட்டார். ஆனால், அதற்காக அவருடைய செயல்கள் அனைத்தையும் கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்க வேண்டுமென்பது அவசியமில்லை. அதே நேரத்தில் ஆரம்ப காலத்திலிருந்து பலர் கண்ணை மூடிக் கொண்டு எதிர்த்து வந்தது போல் நாமும் எதிர்க்க வேண்டும் என்பதும் அவசியமில்லை. இவரது படைப்புத் திறத்தால் பல்வேறு பாதுகாப்புகள் நமது இனத்துக்கும், மொழிக்கும், நாட்டுக்கும் ஏற்பட்டுள்ளன. அதே நேரத்துச் சில பயனற்ற தேவையற்ற முடிவுகளும் இவரால் பல துறைகளில் ஏற்பட்டுள்ளன. இவற்றை எண்ணியே நாம் நமது கருத்துக்களைக் கூற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

*பெரியாரால் விளைந்த குழப்பங்கள்*

தந்தை பெரியார் ஒரு கண்டுபிடிப்புத் திறனுடைய பேரறிஞர். (Mr.E.V.R. is an inventive-spirited genius) இவர் மொழியைப் பற்றியும், சட்டம் பற்றியும் (His new ideas in the field of language and law ......) கூறிய புதிய கருத்துக்கள் சுவையுடையவையே தவிர; பாரம்பரியப் பண்பாடுகளையும், மரபுகளையும் மிகுதியாகப்

பாதிக்க கூடியவையேயாகும் (....These ideas are new, and interesting, but these are harmful and dangerous to our ancient culture and traditions...). சமுதாயச் சீர்திருத்தம் என்ற பெயரால் இவர் சமுதாய மரபுகளேயும், சட்டங்களேயும், கட்டுப்பாடுகளேயும், பிற பழக்கவழக்கங்களேயும் மிகமிக கடுமையாகவும், நாகரிகம் கடந்தும் விமர்சித்தவைகளால் பல பயங்கரப் பேரழிவுகளும், இழிவுகளும், சிதைவுகளும், முறைகேடுகளும், குழப்பங்களும், தேக்கங்களும்..... விளேந்திட்டன. அதனுல் அதற்கெல்லாம் பரிகாரம் தேட வேண்டியவர்களாக இருக்கின்ருேம் நாம்.

இந்தியத் துணேக்கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும், இனத்திலும் தோன்றிடாத மிகப் பெரிய சிந்தனேச் சிற்பி, சீர்திருத்த மாவீரர் பெரியார் ஈ.வெ.ரா. என்ற பேருண்மையை நினேவில் கொண்டுதான் தமிழின மறுமலர்ச்சிப் பணியினே மேற்கொள்ள வேண்டும் நாம். இல்லாவிட்டால் செயற்கரிய, பெரிய, மிகச் சிறந்த, உயரிய சாதனேகளால் ஒரு <u>யுகப் புரட்சியை</u> செய்து சென்ற பெரியாருக்கு நன்றி செலுத்தத் தவறிய மாபெரும் குற்றவாளிகளாவோம் நாம்.

சாக்கிரடீசும், இங்கர்சாலும், கார்ல் மார்க்சும் .... பெற முடியாத மாபெரும் வெற்றியினேப் பெற்றவர் பெரியார் ஈ.வெ.ரா. இவர் தன் காலத்தில் துணிவும், வீரமும், ஈகமும், பொறுப்பும், கட்டுப்பாடும், ஒற்றுமையும் ... நிறைந்த ஒரு தொண்டர் படையை உருவாக்கிட்டார். இதேபோல உலக வரலாற்றில் வேறு எந்தச் சிந்தனேயாளரும் சாதித்தது இல்லே. இச் சாதனேயின் எதிரொலி, செயல் வீச்சு, எண்ண அலே, கருத்தொளி ..... பல நூற்ருண்டுகளுக்கு இருந்தே தீரும். இது பற்றி இன்றைய தமிழர்களில் எவருமே சரியான அறிவோ, உணர்வோ, கணிப்போ பெற்றிடவே இல்லே. ஆனுல் நமது நினேப்பும் உழைப்பும் **பெரியாரின்** இம்மாபெரும்

*பெரியாரைப் பற்றி இன்றைய தமிழர்கள் புரிந்து கொள்ளாத நிலே*

செயற்கரிய **சாதனையை** அடிப்படையாகவும், உள்ளீடாகவும், உறுதுணையாகவும் கொண்டே இருந்திடும்.

நண்பா! நான் பெரியாரைப் பற்றி இவ்வளவு சொல்வதற்குக் காரணம் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரூர் (கி.மு.100 முதல் கி.பி.150 வரை) தனியொரு மனிதராகத் தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழினம், தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரீகம் .... முதலியவற்றின் தனித்தன்மைகளையும், உரிமைகளையும், பெருமைகளையும் காத்திட எடுத்துக் கொண்ட முயற்சிகள் பெருமளவில் தோற்றுலும்; ‘பதினெண் மேல் கணக்கு நூல்கள்’, ‘பதினெண் கீழ் கணக்கு நூல்கள்’, ‘ஐம்பெருங் காப்பியங்கள்’ ‘ஐஞ்சிறு காப்பியங்கள்’ ..... என்ற இலக்கியங்களாவது காப்பாற்றப்பட்டன.

*ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த தமிழின மறுமலர்ச்சிப் போரின் வெற்றிகள்*

இதேபோல் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் (கி.பி. 785 - கி.பி. 1040) தமிழர் நலங் காக்க எடுத்துக் கொண்ட பெருமுயற்சிகள் ஒரு மாபெரும் சோழப் பேரரசையே உருவாக்கிய போதிலும், இவ்வரசர்கள் ஆரிய அடிமைகளாக சமசுகிருத அடிமைகளாக மாறியதால் இவருக்கு மாபெரும் தோல்வியே ஏற்பட்டது. இருப்பினும் இவரால் ‘நாலாயிரத் திவ்விய பிரபந்தங்கள்’, ‘வரலாற்று நூல்கள்’, ‘மருத்துவ நூல்கள்’, ‘அறிவியல் நூல்கள்’, ‘கலை நூல்கள்’ ... முதலியவை காக்கப்பட்டன. இத்துடன் தஞ்சை பெரிய கோயில் முதலாக (48) நாற்பத்தெட்டுக் கோயில்கள் கட்டப் பட்டன. இவருக்குப் பிறகு தமிழின ஆரிய இனப் போராட்டம் (The Conflict of the Tamilian Race and the Aryan Race) தந்தை பெரியாரால் உயிர் பெற்றிட்டது.

*எட்டாம் நூற்றுண்டில் நிகழ்ந்த வடஆரிய-திராவிடப் போரின் வெற்றிகள்*

*பெரியார் ஆரிய-திராவிடப் போர் நடத்திய விதம்*

தந்தை பெரியாரின் ஒரு சில வன்மையான, கடுமையான, நாகரீகம் கடந்த மத எதிர்ப்புக் கருத்துக்கள் அவருக்குத் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் ஆதரிக்காமல் செய்துவிட்டன. அதனுல் அவர் தமது வாழ்நாள் முழுவதும் எதிர் நீச்சல் போடுவதிலேயே கழித்திட்டார். இருப்பினும் அவர் ஆரம்பித்து வைத்த தமிழர் நலங் காக்கும் பணியை முடித்து வைக்க வேண்டிய நல்வாய்ப்பினைப் பெற்றிருக்கிறோம் நாம். எனவேதான் "ஆரம்பமும் முடிவும்" என்ற தலைப்பிலேயே பல அஞ்சல்களையும் கட்டுரைகளையும் பெரியார் பற்றி எழுதியுள்ளேன் நான்.

*பெரியாரைப் பின்பற்றியே தமிழகத்தில் கழகங்கள், இயக்கங்கள் உருவாயின*

நான் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக அருளாட்சிப் பொறுப்பேற்றுப் பயிற்சிக்குரிய பதினெட்டாண்டுகளையும், முயற்சிக்குரிய பதினெட்டாண்டுகளையும் முடித்துக் கூட என்னை இன்னும் வெளிப்படுத்திக் கொண்டு நேரடிப் பொது வாழ்வில் ஈடுபட்டிடாமல் வெறும் எழுத்துப்பணியை மட்டுமே மேற்கொண்டிருப்பதற்கு பல சீரிய காரணங்கள் உண்டு. குறிப்பாக தந்தை பெரியார் ஊட்டிய "சுயமரியாதை உணர்வு, தமிழினப் பற்றுணர்வு, தமிழ்மொழி ஈடுபாட்டுணர்வு, பகுத்தறிவுப்போக்கு" சில இயக்கங்களையும் (Movements and Parties), பல தனித் தலைவர்களையும் (Statesmen, Individual Leadership, Orators ... etc.) உருவாக்கி யிருக்கின்றன. இவற்றுல், தமிழர் நலம் பேணும் முயற்சியெனும் நெருப்பு அணைந்திடாமல் அவ்வப்போது சில சமயங்கள் கொழுந்து விட்டெரிந்தும், பெரும்பாலும் புகைந்து கனிந்து கொண்டும் உள்ளன..... இக்காரணங்களால் தான் உலகெங்குமுள்ள தமிழர்களும் ஆர்வம் பெற்று பங்கு பெற்றிடக் கூடிய ஒரு மாபெரும் இயக்க அமைப்புக்காக அமைதியாகவும், பொறுமையாகவும் செயல்பட்டு வருகின்றேன்.

நண்பா! தமிழரின் விழிச்சியையும், எழுச்சியையும் பலர் சுயநலத்துக்காகப் பலியிட்டும், விலைக்கு விற்றும், ஒத்தி வைத்தும், வாடகைக்குக் கொடுத்தும் பாழாக்கி வீணாக்கி வருகின்றனர். இவற்றால் நாம் உடனடியாக செயல்பட்டேயாக வேண்டும் என்ற இக்கட்டான இன்றியமையா நிலை ஏற்பட்டுள்ளது. எனவேதான் இனியும் கால தாமதம் செய்யக் கூடாது என்று முடிவெடுத்து ஆயிரக்கணக்கில் அச்சேறாமலிருக்கும் பழம்பெரும் நூல்களை அச்சிடவும்; புதிய சிந்தனைகளையும், எண்ணங்களையும், உணர்வுகளையும் ..... தெளிவான கொள்கைகளாக, குறிக்கோள்களாக விளக்கிடும் எனது ஆயிரமாயிரம் அஞ்சல்களிலும், கட்டுரைகளிலும் சிலவற்றை நூல் வடிவில் வெளியிடவும் சில நண்பர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளேன்.

*பெரியார் செய்யத் தவறியவை*

நண்பா! பெரியார் ஈ.வெ.ரா. பொருளாதாரச் சிந்தனை (Economical Thinking) இல்லாமல் இத் திருநாட்டுச் சீர்திருத்தப் பணிகளை ஆற்றியது ஒரு பெரிய குறைதான். அவரால் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அவசியத்தை (The Revolution of the Working Class) உணர முடியாமல் போய்விட்டது என்று கூற மாட்டேன் நான். ஆனால் தானுணர்ந்ததை பிறர்க்கு உணர்த்தத் தவறிவிட்டார் என்று துணிந்து கூறுவேன் நான். இத்துடன் அவர் அறியாமையையும், மடமையையும், மதத்தின் பெயரால் நிகழும் சுரண்டலையும் மட்டும்தான் கண்டித்தாரே தவிர; இத்திரு நாட்டில் முதலாளித்துவச் சுரண்டலையும், ஏழை, எளிய, பாட்டாளிகளின் வறுமைத் துயர்களையும் (The Sufferings of Poverty and Starvation), நடுத்தர வர்க்கத்தின் அலுவலக வாழ்வில் வளரும் அடிமைப் புத்தியையும் (The Slavery attitude of the Middle class who are the Office-Goers, The Selfish and Slavery Mentality of the Office-Going people) .... நேரடியாகத் தாக்கி விமர்சித்துப் புரட்சிக்கு வித்திடத் தவறி

விட்டார் பெரியார் ஈ.வெ.ரா. என்ற குறையை, கறையை .... யாராலும் மூடி மறைக்க முடியாது.

அதனுல்தான் இவர் 'தனிநபர் வாழ்வு', 'சமுதாய வாழ்வு', 'அரசியல் வாழ்வு' ...... ஆகிய மூன்று நிலேயிலும் பல கருத்துப் புரட்சியை செய்தும் கூட; வரலாற்றுச் சிறப்புமிக்க எந்த நிலேயையும் தனக்கு தேடிக் கொள்ள முடியாதவராகி விட்டார். இதே நேரத்தில் சித்தர்கள் எவ்வளவுதான் புற இனத்தார்களாலும், புறச் சமயத்தார்களாலும் தாக்குண்டு தகர்த்து மூடி மறைக்கப் பட்டாலும்; அனேத்தையும் வென்று நிலேயான வரலாற்றுச் சிறப்புப் பெற்றுள்ளது நினேத்துப் பார்த்தற்கு உரியது. சித்தர்கள் 'பொருள்முதல் வாதச் சிந்தனே', 'புரட்சிகரமான செயல் திட்டம்', 'பகுத்தறிவு அணுகுமுறை', 'விஞ்ஞானக் கண்ணேட்டம்' ......... முதலியவற்றை உடையவர்கள். ஆனுல், நாட்டில் பொதுவாகச் 'சித்தர் நெறி வறட்டு வேதாந்திகளேயும், தோல்வி மனமுடைய தத்துவ ஞானிகளேயுமே உருவாக்கும்' என்ற குற்றச்சாட்டு இருந்து வருகின்றது. ஆனுல் இது ஒரு தவருன குற்றச்சாட்டாகும். சித்தர் நெறித் தத்துவம் பல அகத்தியர்களே, பல ஔவையார்களே, பல கபிலர்களே, பல கல்லாடர்களே, பல பட்டினத்தார்களே, பல நக்கீரர்களே, பல தாயுமானவர்களே, பல ஞான வள்ளல்களே, ........... உருவாக்கி வந்திருக்கின்றது. உலகந் தழுவிய மொழித் துறையிலும், சமயத்துறையிலும், மருத்துவத்துறையிலும், அரசியல் துறையிலும் ........ பல பொதுமைப் பேருண்மைகளே ஈன்றெடுத்த பெருமை சித்தர் நெறிக்கே உண்டு. இவற்றை உலகம் உணரவில்லேயென்று வருந்துவதை விடத் தமிழர்களே இன்னும் உணராமல் இருக்கின்ருர்களே என்று வருந்துவதுதான் முறையானது, தேவையானது.

*சித்தர் நெறி சமத்துவத்தையும், பொதுவுடமையையும் வளர்த்துக் காப்பது*

நண்பா! நாம் தமிழின விடுதலைப் போருக்கும், உரிமைப் போருக்கும், தன்மானப் போருக்கும், தனித்தன்மை நிலை நாட்டும் பெருமைப் போருக்கும், மொழி காக்கும் போருக்கும், சமயம் காக்கும் போருக்கும், சமுதாயம் காக்கும் போருக்கும் ......... முடிவு காண வேண்டியவர்கள் என்ற பொறுப்போடு செயல்படுவோமாக! நம் காலத்தவர்களின் நம்பிக்கை மிக்க நல்ல துணையோடு நம் பணி நிறைவேறட்டும்.

**சித்தர்**

//உண்மை நகல்//

//இந்தக் கட்டுரை 'குருதேவர்' அறிக்கை 18, 19, 17&21, 22 ஆகிய நான்கில் தொடர் கட்டுரையாக வெளியிடப் பட்டது.//

தமிழினம் ஓர் உலக முதன்மை பெற்ற இனம்; இந்தத் தமிழினத்தின் உயிர்நாடியே சமயத் தத்துவம்தான். இந்தச் சமயத் தத்துவம்தான் சித்தர் நெறி எனும் மெய்யான இந்துமதம் ஆகும்.

# இந்து மதம் - *ஹிந்து* மதம் வேற்றுமை விளக்கக் கட்டுரை

**இந்து மதம், *ஹிந்து மதம்* - இது *என்ன* புதுக் குழப்பம் என்று திகைக்க வேண்டாம். இக்கட்டுரையினை அனைவரும் படித்துணரும் போது ஆரியர்களின் *பொய்யான* ஹிந்துமதத்தை உணர்வர். பகுத்தறிவும் பயனுமுடைய பதினெண் சித்தர்களின் உண்மையான 'இந்து மதம்' அனைவருக்கும் தெரிய வரும்.**

இன்றைய நாட்டு நடப்பில், நாத்திகர்களும், மத எதிர்ப்பாளர்களும் மதவரலாறுகளையும், மத இலக்கியங்களையும், தத்துவங்களையும் ஊன்றிப் படித்து வருகின்றார்கள். மதவாதிகள் அனைவரும் ஆர்வமோ, ஆழமான புலமையோ இல்லாதவர்களாகத்தான் வாழ்கின்றார்கள். இவற்றால்தான் (2014ஆம் ஆண்டுக் கணக்கின்படி) 43,73,115 ஆண்டுகளுக்கு முன்னால் உருவான **மெய்யான இந்து மத**த்தை (3000) மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வந்த வடஆரியர்கள் தங்களுடைய ஆபாசக் கற்பனைகள் மிகுந்த, காட்டுமிராண்டிக் கதைகள் மிகுந்த, வாழ்வியலுக்குப் பயன்படாத நடைமுறைகளும் மிகுந்த தங்களுடைய வேத மதத்தால் உருத்தெரியாமல் சீரழித்துச் சிதைத்து விட்டார்கள். அதாவது, இன்றைக்குச் சொல்லப் படுகின்ற *ஹிந்துமதம்* உருவாயிற்று. இந்த ஹிந்து மதத்தால்தான் சாதிகள் (ஜாதி) வலுப்பட்டன. சாத்திர (சாஸ்த்திர) சடங்குகள், விரதங்கள் மிகுந்தன. மதமே மடமையும், மூடநம்பிக்கையும், ஆபாசமும் மிகுந்தது என்ற கருத்து வலுப்பட்டது.

*பொய்யான ஹிந்துமதம் தோன்றியது எப்போது? எப்படி? யாரால்?*

இந்த *ஹிந்து மதத்தால்தான்* அனைத்து வகையான முன்னேற்றங்களுக்கும் முட்டுக்கட்டை போடப் படுகின்றன என்று பகுத்தறிவு வாதிகளும், நாத்திகவாதிகளும் துணிந்து பேச ஆரம்பித்து விட்டார்கள். இவற்றிற்கு எல்லாம் மேலாகச் சத்தியையோ, சித்தியையோ தர முடியாத சமசுகிருத மந்திரங்களால் அலுப்பும், சலிப்பும், புளிப்பும், தோல்வியும் அடைந்திட்ட உண்மையான பத்தர்கள் திகைத்துத் திணறி *ஹிந்து மத* மறுப்பாளர்களாகவும், வெறுப்பாளர்களாகவும் மாறிடும் நிலை ஏற்பட்டது.

சமசுகிருத மதம் கூறும் புராண இதிகாசங்கள் ஏற்கனவே தமிழிலுள்ள **மெய்யான இந்து மத**த்தின் புராண இதிகாசங்களோடு வேறுபட்டும், மாறுபட்டும், முரண்பட்டும் தெளிவுக்கே வர முடியாத குழப்பநிலை பெற்றுவிட்டன. ஆன்மீகத் துறையிலுள்ள இலக்கியங்களின் பெயர்களையும், பழக்க வழக்கச் சம்பிறதாயங்களின் பெயர்களையும், பிற மத வாழ்வியல் நடைமுறைகளைக் குறிக்கும் சொற்களையும் சமசுகிருத மொழிச் சொற்கள் சிதைத்துப் புதிய பொருளற்ற சொற்களை உருவாக்கியும்; முழுமையாகக் கொன்று மூடி மறைத்து விட்டு பொருளுள்ள புதிய சொற்களை உருவாக்கியும் செயல்பட்டு விட்ட காரணத்தினால்தான் *ஹிந்து மதம்* என்ற ஒன்று தனியாக இருக்கின்றதா என்ற ஐயம் பிறந்தது.

***ஹிந்து மதம் என்கின்ற ஏமாற்றை ஏன் தமிழர் மதத்திலிருந்து பிரித்து உணர முடியவில்லை?***

அதாவது, அனாதி காலத்துக்கு முன் விண்வெளியிலிருந்து வந்த பதினெண்சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியான அமுதத் தமிழ் மொழியில் வெளியிட்டதுதான் அண்டபேரண்டமாளும் **மெய்யான இந்துமதம்**. இதற்கு தெளிவான வரலாறு உண்டு, பயன்மிக்க இலக்கியங்களும் உண்டு, நடைமுறைகளும் உண்டு.

இவற்றையெல்லாம் வடஆரியர்கள் தங்களுடைய சமசுகிருத மொழியால் நன்கு திட்டமிட்டுப் படிப்படியாக அடிப்படையோடு சிதைத்துச் சீரழித்து விட்டார்கள். இம்மாபெரும் மோசடியை, பித்தலாட்டத்தை, ஏமாற்றத்தை, சதியை, சூழ்ச்சியை ..... பதினெண்

சித்தர் பீடாதிபதிகளால்தான் முறையாகவும், நிறையாகவும் இனங் கண்டு தெளிவாக விளக்கியுரைக்க முடியும். இதைத்தான் பத்தாவது, பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதிகள் செய்தார்கள். இருந்த போதிலும், நீடித்த நிலைத்து நிற்கக் கூடிய வெற்றிகளைப் பெற முடியாமல் போய்விட்டது. எனவேதான், ஏட்டுலகில் கட்டுரைகளாகவும், நூல்களாகவும் **மெய்யான இந்து மத**த்தின் மறுமலர்ச்சிக்கும், வளவளர்ச்சிக்கும், ஆட்சி மீட்சிக்கும் சாதனைகள் சாதிக்கப் படுவதோடு; நாட்டு நடப்பில் அருளை அனுபவப் பொருளாக வழங்கக் கூடிய அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் தோற்றுவிக்கப்பட்டுப் பரவலாக அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட நேரிட்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் மேலாக கற்றவர்களுக்கிடையில் தமிழ் மொழியுணர்வு, இனப்பற்று மிகு ஒற்றுமையுணர்வு, பண்பாட்டுப் பாரம்பரிய உரிமையுணர்வு ..... முதலியவைகள் விழிச்சி பெற்றும், எழிச்சி பெற்றும், செழிச்சி பெற்றும் இந்துமத மறுமலர்ச்சிக்குரிய பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

**இந்து மத**த்தையும், *ஹிந்து மதத்*தையும் தனித்தனியாகப் பிரித்து வேறுபடுத்திக் காட்டிச் செயல்பட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது? என்பதனை மெய்யான இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் புரிந்து கொண்டேயாக வேண்டும் என்பதற்காக மட்டும் சித்தர் நெறிச் செல்வர்கள் செயல் படத் துவங்கவில்லை. ஹிந்துமதத்தால் நிகழும் தீமைகளாக;

***ஹிந்து மதத்தால் என்ன தீங்கு? என்ன கேடு?***

நிறைய செயல்நிலை மோசடிகள், சுரண்டல்கள்,

தத்துவத் தவறுகள், வரலாற்றுக் குழப்பங்கள், இருட்டடிப்புக்கள்,

அருளுலக இருள்கள், இழப்புக்கள், நலிவுமெலிவுகள், குறைகள்,

பொருளுலகச் சர்வாதிகாரங்கள், ஏதேச்சதிகாரங்கள்,

சாதிச் சண்டைகள், மதப் போட்டிப் பொறுமைப் போர்கள்,

கூலி மனப்பான்மை வளர்த்தல், ஏழ்மையை நியாயப் படுத்துதல்,

வறியவர்களைச் சிந்திக்க விடாமல் செய்தல்,

முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடும் மூடப் பழக்கவழக்கங்களாலும், அறிவுநிலையை நோயுறச் செய்யும் கண்மூடித்தனமான நம்பிக்கைகளாலும் தமிழினப் பற்றையும், ஒற்றுமையையும் ஒழித்தல்,

தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுபாடுகளைச் சிதைத்துச் சீரழித்தல்,

உண்மையான இந்துமத வாழ்வால் கிடைக்கக் கூடிய அருட்சத்திகளையும், சித்திகளையும், முத்திகளையும் கெடுத்தல்; அருளுலக அநுபவங்களைப் பெற முடியாமல் தடுத்தல்,

இந்துமதத்தையே கவைக்குதவாத கற்பனைகளும், காட்டு மிராண்டிக் கதைகளும், அநாகரீக ஆபாசங்களும் மிகுந்த பயனற்ற ஒன்றாக இயங்கச் செய்தல்,

இந்துமத வரலாறுகளையும், இலக்கியங்களையும், தத்துவங்களையும், வாழ்வியல்களையும், செயல்சித்தாந்தங்களையும் உருத் தெரியாமல் செய்தல்,

இந்து மதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர்களின் கருவழி வாரிசுகளும், குருவழி வாரிசுகளும் இந்துமத வழிகாட்டலைச் செய்ய முடியாமல் செய்தல் ...

...... என்று எண்ணற்ற குற்றச்சாட்டுக்களை *ஹிந்து மத*த்தின் மீதும், அவற்றின் சொந்தக்காரர்களான <u>பிறமண்ணினர்களான பிருமணர்கள்</u> மீதும், அவர்களின் சமசுகிருத மொழியின் மீதும், அவர்களின் வேத நாகரீகத்தின் மீதும் கூறிக் கொண்டே செல்லலாம்.

இப்படி மிகத் தெளிவான குற்றச்சாட்டுக்கள் இருக்கின்ற காரணத்தால்தான் இவற்றிற்குப் பரிகாரம் தேடி, மேற்கண்ட *ஹிந்து மத*த்தையும், அதற்குரிய மனிதர்களையும், அவர்களின் முயற்சிகளையும் எதிர்த்துப் பேசிப் போராடி விமர்சித்து வீண்பொழுது போக்காமல், நேரடியாக **உண்மையான இந்துமத**த்தின் வரலாறுகளையும், தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும், அநுபவ நெறிகளையும், கடைப்பிடிக்க வேண்டிய சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும்,

சடங்குகளையும், சம்பிறதாயங்களையும், பூசாவிதிகளையும் ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் வழங்குகிற பணி இ.ம.இ.யின் மூலம் நடைபெற ஆரம்பித்து விட்டது.

இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் இம்மாபெரும் பணிகளைக் கட்டுக்கோப்பாகப் பிருமணர்களும், பிருமண அடிமைகளும், ஆர்வலர்களும், ஆதரவாளர்களும், பிருமண மாயையில் உழலும் அப்பாவிகளும் இருட்டடிப்புச் செய்கிறார்கள்! இருட்டடிப்புச் செய்கிறார்கள்!! இருட்டடிப்புச் செய்கிறார்கள்!!! இதுவரை வெளியிட்ட கோடிக்கணக்கான அறிக்கைகளும் ஓடி மறைந்த மாயமென்ன? தேடிப் பயனைத் தரமுடியாத காரணமென்ன? என்றெல்லாம் எண்ணி எண்ணிக் காலத்தை வீணுக்குவதைச் செய்யாமல், தொடர்ந்து நம்பிக்கையோடு, கொந்தளிக்கும் கடலின் நெடிய தொடரலைகள் போல் சித்தர்நெறிச் செல்வர்கள் பேச்சாலும், எழுத்தாலும், செயலாலும் **மெய்யான இந்து மத**த்தை விளக்கியுணர்த்தி நிலை நாட்டிட ஆரம்பித்து விட்டார்கள். அதன் ஓர் அங்கமே இந்தக் கட்டுரை.

*200 ஆண்டுகளாக இ.ம.இ. செயல்பட்டும் தமிழ்நாட்டில் இதன் சுவடே தெரியவில்லை.*

## கோயில்களில் கோள் வழிபாட்டில் செய்த குழப்பம்

பதினெண்சித்தர்கள் தாங்கள் உருவாக்கிய வழிபாட்டு நிலையங்களில் (48 வகை) எந்தெந்த வழிபாட்டு நிலையங்களில் <u>மட்டும்</u> ஒன்பது கோள்களும் பீடம் அமைக்கப் பெற்று வழிபடு நிலை பெறலாம் என்ற ஆகம விதியை, சுருதி மறையை, ஆரண முறையை, மீமாம்சை நெறியை, வேத ஏந்துகளை ..... வகுத்துச் சென்றிட்டார்கள். அதன்படி **<u>ஒரே நேர் கோட்டில் ஒரே திசையைப் பார்த்து</u>** ஒன்பது (9) கோள்களும், (ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது) ஒரே பீடத்தில் அமர்ந்து அருள் வழங்கும் அருளாட்சி அரியணை அமைக்கும் சட்டம் செய்யப் பட்டது.

ஆனால் சூழ்ச்சியும், சூதும், வாதும், வஞ்சகமும், சுரண்டலும், ஏமாற்றும், மோசடியும் ...... செய்யும் துணிச்சல் மிக்க பிருமணர்கள் இந்த அருளாட்சி அரியணைச் சட்டத்தையே உடைத்தெறிந்து விட்டு ஒன்பது (9) கோள்களையும் பல திசைகளைப் பார்த்துக் கொண்டு நிற்கக் கூடிய கூட்டமைப்புப் பீடமாக மாற்றினார்கள். அத்துடன் பொதுமக்களின் சௌகரியத்துக்காக என்று கூறிப் பதினெண் சித்தர்களின் ஆகம விதிகளை மீறித் தங்களுடைய விருப்பம்போல் அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களுக்கு உள்ளும், புறமும் நினைத்த இடத்தில் ஒன்பது கோள்களுக்கும் பீடம் அமைத்தார்கள்.

இதனால் பதினெண்சித்தர்கள் உருவாக்கிய அருள் நிலையங்கள் அனைத்தும் பாழ்பட்டன, செயலிழந்தன. அதனால் பிருமணர்கள் தங்கள் விருப்பம்போல் பூசாறியாக, குருக்களாக, பண்டாரமாக, தேசிகராக, ஓதுவாராக, பட்டராக .... மாறிக் கொண்டார்கள்! மாறிக் கொண்டார்கள்!! மாறிக் கொண்டார்கள்!!! அதாவது, அருளூற்றுக்கள் அடை பட்டதால் பிருமணர்கள் அச்சமோ, கூச்சமோ இன்றி, மெய்யான இந்துமதத்திற்கு உரிய வழிபாட்டு நிலையங்களைக் கைப்பற்றிப் *பொய்யான ஹிந்துமதத்திற்கு* உரியதாக ஆக்கி விட்டார்கள்.

இப்படிப் பிருமணர்கள் **அருளுலகத்தின் கோட்டைகளான** வழிபாட்டு நிலையங்களைக் கைப்பற்றிக் கொண்டு விட்டதால் அருளுலகில் தங்களின் வேதமதமான *ஹிந்துமதத்தை* மிக வேகமாகப் பரவச் செய்து செல்வாக்குப் பெற்றிட்டார்கள். எனவே, இந்துக்களும், *பிருமணர்களின் சமசுகிருத மொழிதான் அருளாட்சி மொழி என்று நம்பி ஏமாந்தார்கள்.* பிருமணர்களின் ஆபாசக் கதைகளையும், அண்டப் புளுகுகளையும், காட்டுமிராண்டிக் கற்பனைகளையும் நம்பி மோசம் போனார்கள். சமசுகிருத மொழியிலேயே தங்களது பூசைகளையும், சடங்குகளையும், பிறவற்றையும் செய்து அருளுலகக் குருடர்களாக மாறினார்கள். இதனால் பிருமணர்கள் மெய்யான இந்துமதத்தை ஒழிப்பதற்குத் தேவையான கூலிகளையும், போலிகளையும்,

துரோகிகளேயும், கங்காணிகளேயும், அப்பாவி அடிமைகளேயும் மிக எளிதில் உருவாக்கி விட்டார்கள்!

இன்றைக்கு ஆயிரமாயிரம் சித்தரடியான்களும், சித்தரடியாள்களும், சித்தரடியார்களும் தொடர்ந்து முயற்சித்தும் கூட தமிழர்களே *பொய்யான ஹிந்து மதத்துக்குப்* பாதுகாப்புத் தருகிறுர்கள். **மெய்யான இந்துமத**த்தை எதிர்க்கிறுர்கள். இவற்றுல்தான் **மெய்யான இந்துமதம்** பற்றியும், *பொய்யான ஹிந்துமதம்* பற்றியும் விளக்கியுரைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

## பிறமண் வரலாற்றில் ஏற்படுத்திய குழப்பம்

**மெய்யான இந்துமதப்**படி பதினெண்சித்தர்கள் மண்ணின் ஈசர்களான மணீசர்களின் அக, புற நாகரிகங்களேயும், வாழ்வியல்களேயும், பண்பாடுகளேயும் மேம்படுத்த வேண்டி தங்களுக்குள்ளே ஒருவரை 'பிறமண்' ஆக தேர்ந்தெடுத்தார்கள். பதினெண் சித்தர்கள் அறுவை மருத்துவத்தில் சிறப்பான தேர்ச்சி பெற்றவர்கள் என்ற காரணத்திஞலே மற்ற மனிதர்களுக்கும், பிறமணுக்கும் வேறுபாடு தெரிய வேண்டி பிறமணுக்கு அறுவை மருத்துவம் செய்து ஐந்து தலேகளேப் பொருத்திஞர்கள். பின்னர் ஈசனுக்கும் (ஈசனும் ஐந்து தலே உடையவர்) பிறமணுக்கும் அடையாளம் தெரிய வேண்டி பிறமணின் ஐந்து தலேகளிலிருந்து ஒரு தலேயை அகற்றி விட்டார்கள்.

ஆஞல் *பொய்யான ஹிந்து* மதப்படி *'எங்கும் வியாபித்திருந்த பிரளய ஜலத்திலே எல்லாம் வல்ல இறைவன் சங்கல்பத்தால் ஒரு தாமரை தோன்றியதென்றும்; அதிலே பிரம்ம தேவன் தோன்றிஞன் என்றும், அவனுக்கு நான்கு முகங்களும், நான்கு கரங்களும் உள்ளன என்றும்; மேல் வலக் கரத்தில் ஜபமாலேயும், மேல் இடக் கரத்தில் கமண்டலமும் பிரம்மனுடன் தோன்றின'* என்றும் கூறப்படுகிறது. மேலும், *'திருமாலின் நாபிக் கமலத்தில்தான் அந்தத் தாமரை மலர் தோன்றியது'* என்றும், அதாவது *'திருமால்தான் பிரம்மனேப் படைத்தார்'* என்றும் கூறப் படுகிறது.

## உலகின் தோற்றம் பற்றிய குழப்பம்

**உண்மையான இந்துமதப்**படி அண்டங்களும், பேரண்டங்களும், அண்டபேரண்டங்களும் இயற்கையாகத் தோன்றின, இவைகளில் 108 திருப்பதி அண்டங்களிலும், 243 சத்தி அண்டங்களிலும், 1008 சிவாலய அண்டங்களிலும்தான் மனிதன் வாழ்கிறான்.

*பொய்யான ஹிந்து மதப்படி 'பிரம்மன்தான் ஈரேழு உலகங்களையும் படைத்தான் என்றும்; பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் ஆகிய மூன்று உலகங்களைத்தான் பிரம்மன் முதலில் படைத்தான்' என்றும்; 'அதனின்றுதான் மகலோகம், ஜனலோகம், தப லோகம், சத்யலோகம் ஆகியவை உருவாகின' என்றும் கூறப்படுகிறது.*

**உண்மையான இந்து மத**த்தில் உயிரினங்களும், பயிரினங்களும், இயற்கையாகவே தோன்றின. உயிரினங்களில் அங்கவியல் சாத்திரப்படி (சாமுந்திரிகா லட்சணம்) நான்கு **மணிசர்களை** பிறமண் தேர்ந்தெடுத்து நேம, நியம, நிடத, நிட்டைகள், சுருதி, ஆரண, ஆகம, மீமாம்சை, நான்மறை, நான்முறை, நானெறிகள், நான் வேதங்கள், ..... முதலியவைகளை அவர்களுக்குக் கற்பித்து அவர்களை **மனிதர்களா**க்கி தன்னுடைய 'படைப்புத் தொழிலுக்கு' (அதாவது வாழ்வியல் இயக்கத் தேவையான கலைகள், அறிவியல்கள், விதிகள் படைத்தல்) உதவியாக வைத்துக் கொண்டார். அவர்களே சனகன், சனந்தன், சனத்சாதகன், சனத்குமாரன் என்பவராவர்.

*பொய்யான ஹிந்து மதப்படி 'புல், பூண்டு, செடி, கொடி, மரம், பட்சிகள், பிராணிகள் என்று தொடங்கிய பிரம்ம சிருஷ்டியில் ஒன்பதாவதாக மனிதனை உருவாக்கினார் பிரம்மன். முதலில் பிரம்மதேவன் பகவானை தியானித்து புனிதமான (4) நான்கு மனிதர்களை தன் புத்திரர்களாக தோற்றுவித்தான். சனகர், சனந்தர், சனத்சுஜாதர், சனத்குமாரர் என்ற நால்வரே முதலில் தோன்றிய பிரம்ம குமாரர்கள். தன்னுடன் இருந்து படைத்தல் தொழிலுக்கு உதவுமாறு தன் குமாரர்களை வேண்டினான் பிரம்மன். ஆனால் அவர்களோ ஆத்ம ஞானமும், தெய்வ ஞானமும் மேலோங்கிய*

*மனிதர்களாகப் பிறந்ததால் பகவானின் சேவைக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு தவம் செய்யச் சென்று விட்டனர்'* என்று கூறப்படுகிறது.

**மெய்யான இந்துமத**ப்படி பிறமண் தேர்ந்தெடுத்துத் தயாரித்த சனகன், சனந்தன், சனத்சாதகன், சனத்குமாரன் முதல் உகமான கிரேதாயுகத்தில் பதினெண்சித்தர் பீடத்தில் முதல் பீடாதிபதியாக இருந்த சிவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கல்லால மரத்தின் கீழ் அமரச் செய்து, அனைத்து இந்துமதப் பேருண்மைகளையும் கற்றுக் கொடுத்து, அவர்களை நடமாடும் நூலகமாக, எழுதாக்கிளவி இலக்கியங்களின் நாயகமாக, உரிய பக்குமடைந்தவர்களுக்கு மட்டுமே இந்து மதத்தின் அரிய பெரிய உண்மைகளைக் கூறும் பொறுப்பு நாயகமாக உருவாக்கப் பட்டார்கள். இன்றைக்கும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் இந்த நான்கு சனகன், சனந்தன், சனத்சாதகன், சனத்குமாரன் ஆகிய இந்துமதக் கருத்துக் கருவூலங்களோடு தொடர்பு கொண்டுதான் இந்துமதப் பேருண்மைகளைத் தெரிந்து அருளாட்சி செய்யும் மரபு இருந்து வருகிறது. இதுவே மெய்யான இந்துமதத்திலுள்ள இந்த நால்வரின் வரலாறு.

*பொய்யான ஹிந்து மதப்படி, 'பிரம்மனின் நான்கு புத்திரர்களும், தவம் செய்யச் சென்று விட்டதால் பிரம்மதேவன் தன் புருவங்களின் அசைவினால் மற்றொரு புதல்வனை உருவாக்கினான். அவன் நீலலோகிதன் அல்லது ருத்ரன் எனப் பெயர் பெற்றான். தந்தையின் ஆணைப்படி அவன் சிருஷ்டித் தொழிலைத் தொடங்கினான். பஞ்ச பூதங்களுக்கு அதிபதியாகி பல உயிர்களை தோற்றுவித்தான் ருத்ரன். ஆனால், அவன் சிருஷ்டியால் உடல் பலமும், ஆணவமும், ஆத்திரமும், ஆவேசமும் மிக்க மனிதர்களே தோன்றினர். எனவே, பிரம்மன் தன் மகனை அழைத்துத் தவம் செய்யாமல் நீ செய்யும் படைப்புக்களால் லோகத்திற்கு நஷ்டமே உண்டாகும்; எனவே தவம் செய்வாயாக என்று கூறி விடை கொடுத்து மீண்டும் தானே சிருஷ்டியை மேற்கொண்டார்.'*

இப்படி ஆபாசக் கதைகளின் மூலமும், காட்டுமிராண்டித்தனமான கற்பனைகளின் மூலமும், அண்டப்புளுகுகளின் மூலமும் ஆரியர்கள் தமிழர்களைத் தவறான திசைக்குத் திருப்பி விடப் பார்க்கிறார்கள். எங்கே இன்றைய தமிழ்ப் பத்தர்களும், அருளுலக ஆர்வலர்களும், ஆதரவாளர்களும் ....... மேற்கூறிய சனகர், சனந்தர், சனத்சாதகர், சனத்குமாரர் ஆகிய நால்வருடன் பத்தியால் தொடர்பு கொண்டு அருளுலகப் பேருண்மைகளைத் தெரிந்து கொண்டு விடப் போகிறார்களோ என்ற மித மிஞ்சிய அச்சத்தாலும், பயத்தாலும்தான் ஆரியர்களான பிருமணர்கள் இவ்விதமான கட்டுக்கதைகளை பரப்பி வருகின்றார்கள்.

**உண்மையில்** இந்த மண்ணுலகில் பிறப்பவைகளுக்கு உரிய பணிகளைச் செய்யும் பொறுப்பை ஏற்றுச் செயல்படுமாறு செயல்பட்டவரே பிறமண் (பிற = பிறப்பிற்குரிய, மண் = இம்மண்ணுலகில்). எனவே பிற + மண் = பிறமண் என்றால் இம்மண்ணுலகில் பிறக்கக் கூடியவைகளைப் பற்றிய பணிகளைக் கவனிப்பவர் என்றுதான் பொருள். இவரும் ஒரு சித்தரே. பிறமண் என்பது ஒரு பதவிதான். இந்தப் பதவியில் அடிக்கடி விண்ணுலகச் சித்தர்களும், மண்ணுலகச் சித்தர்களும் தேவைக்கேற்ப மாறிமாறிப் பதவி வகிப்பார்கள். இதுதான் பிறமணைப் பற்றிய உண்மையான வரலாறு.

இம்மண்ணுலகில் கோடிக்கணக்கான பிறமண்கள் பதவி வகித்துச் செயலாற்றியிருக்கிறார்கள். இப்பதவி போன்றதுதான் சிவன், திருமால், தேவேந்திரன், இந்திரன், வருணன், இயமன், .... முதலிய அனைத்துப் பதவிகளும். அதாவது மேற்படி பதவிகளில் அமருபவர்கள் மனிதர்களாக வாழ்ந்து சத்தி, சித்தி, முத்தி பெற்ற பெரியோர்களும், விண்ணுலகத்தவர்களும் பொறுப்பேற்பதுதான் வழக்கம். இதுவே உண்மையான இந்துமத வரலாறு. இதில் கற்பனையோ, ஆபாசமோ, பொய்யோ இல்லை.

## முனிவர்களும் இந்து - *ஹிந்து* மதக் கருத்து முரண்பாடுகளும்

**இந்து மதத்தில்** முனிவர்கள், இருடிகள், கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள், கந்தர்வர்கள், கிண்ணரர்கள், கிம்புருடர்கள், ….. என்று பலர் இம்மண்ணுலகில் தோன்றிய மனிதர்களுக்குள்ளிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு உருவாக்கப் பட்டவர்களே யாவார்கள். இவர்கள் மூலமே பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், இந்த மண்ணின் ஈசர்களான மணீசர்கள் (மண் + ஈசர் = மணீசர்; சித்தர்களின் நூல்களில் மணீசர் என்றுதான் குறிக்கப் படுகிறது. மனிதர் என்ற சொல் ஆட்சியில் இல்லை) வாழ்வில் அருட் பயிரினங்களை விளைவித்தார்கள். எனவே குறிப்பிட்ட முனிவர், இருடி, … முதலியவர்கள்தான் அருட்பயிர் விளைவிக்கும் உழவர்கள் ஆவார்கள். இவர்களின் பட்டியலிலே நாரதர், பிறப்பாதி#, பிறப்பதிபதி# (#இந்த இருவரை ஆரியர்கள் தங்களின் சமசுகிருத மொழியில் *பிரஜாபதி* என்று குறிப்பிடுகிறார்கள்), வசிட்டர், அத்திரி, பத்திரி, புத்திரி, போத்திரி, முத்திரி, சித்திரி, பிறங்கி# (#*பிருங்கி* என்று சமசுகிருதத்தில் சொல்கிறார்கள்) 1) அருகு 2) இருகு 3) உருகு 4) எருகு 5) குருகு 6) தருகு 7) புருகு# (#*ப்ருகு* என்று சமசுகிருதத்தில் கூறுகிறார்கள்) 8) வருகு 9) திருகு 10) முருகு என்று பத்து பேர் “அருகாதிப் பதின்மர்” என்ற பெயரில் ஒருங்கிணைந்து செயல்படும் குழுவாகப் படைக்கப் பட்டார்கள்.

‘பிறங்கியாதி பதினறு பேர்’ என்றோர் சொற்றொடர் குருபாரம்பரியத்தில், குருவாசகத்தில், குருவாக்கியத்தில் காணப்படுகின்றது. ஆனால், இந்தப் பதினறு பேர் யார் என்று கண்டுபிடிக்கக் கூடிய அளவிற்குப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய எமக்குப் போதுமான வசதி வாய்ப்பு ஏற்படவில்லை என்பதை வருத்தத்தோடு கூறிக் கொள்கிறோம். இது பற்றித் தெரிந்தவர்கள் உடனடியாக செய்தி அனுப்புமாறு வேண்டிக்

கொள்கிறோம். அதுவே உண்மையான இந்துமதத்தை செழிச்சி பெறச் செய்ய உதவும்.

ஆரியர்களால் உண்டாக்கப் பட்ட *பொய்யான ஹிந்துமதத்தில்* மேலே கூறிய வரலாற்றுக்கு முரணான செய்திகளை ஆபாசமான முறையில், அறிவுக்குப் பொருந்தாத வகையில் கூறுகிறார்கள்:- *'பிரம்ம தேவன் மடியிலிருந்து நாரதர் தோன்றினார். கட்டை விரலிலிருந்து பிரஜாபதி தோன்றினார். பிராணனிலிருந்து வசிஷ்டர் தோன்றினார். தொடர்ந்து பிரம்மனின் சங்கல்பத்தால் அத்ரி, ப்ருகு ஆகிய மஹரிஷிகள் தோன்றினர்.'*

**மெய்யான இந்துமதத்தில்**, விண்வெளியிலிருந்து பதினெண்சித்தர்களோடு வந்தவர்களில் ஒருவரையே முதன்முதல் பிறமண் என்ற பொறுப்பில் நியமித்தார்கள் பதினெண்சித்தர்கள். சித்தர் நெறிப்படி 'பெண்மையே இறைமை', 'தாயே தெய்வம்', 'பெண் வழியே அருளுலகப் பத்தி சத்தி சித்தி முத்தி வாழ்வு வாழ வேண்டும்', 'பெண்ணின்பமே பேரின்பம்', 'பெண்ணே அருவ சத்திகள் அனைத்தையும் உருவமாக்கித் தர வல்லவள்', 'பெண்ணே ஞானப் பயிர் விளைவிக்கும் நல்ல நிலம்', ... என்ற தெளிவான கருத்துக்கள் இருப்பதால் இந்தப் பிறமண் இம்மண்ணுலகத்துப் பெண்களில் அருட்கல்விக்குத் தகுதி உடையவர்களையெல்லாம் தேர்ந்தெடுத்துக் கல்வி புகட்டிக் கலைமகள்கள் ஆக்கினார். அப்படி அவர் உருவாக்கிய மாணவிகளில் தலை சிறந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்துத்தான் தன் மனைவியாக ஆக்கிக் கொண்டார். இப்படிக் குருபாரம்பரியம், குருவாசகம், குருவாக்கியம் முதலிய நூல்கள் பதினெண்சித்தர்கள் உண்டாக்கிய மெய்யான இந்துமதத்தில் வாழ்ந்த பிறமண் என்ற சித்தரின் காதல் திருமணம் பற்றிய செய்தியைக் குறிக்கின்றன.

ஆனால், பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியர்கள் தங்களுடைய சமசுகிருத மொழியில் தாங்கள் உருவாக்கிய *பொய்யான ஹிந்துமதத்தில் 'இப்படி பிரம்மன் தொடர்ந்து சிருஷ்டித்துக்*

*கொண்டிருந்த போது அவன் சங்கல்பத்தால் கல்விக்கும், ஞானத்துக்கும், அறிவுக்கும் உறைவிடமான சரஸ்வதி தோன்றினாள். அவளே பிரம்மனின் தர்ம பத்தினியானாள். தான் படைத்த பெண்ணைத் தனக்குப் பத்தினியாக்குமுன் பிரம்மன் தன் தேகத்தைப் புதிய சரீரமாக மாற்றிக் கொண்டான். இங்கே மறுபிறவித் தத்துவத்தைப் பிரம்மனே ஆரம்பித்து வைக்கிறான்.'*

## நான்கு வேதங்களில் பிருமணர்கள் செய்த குழப்பம்

பதினெண்சித்தர்கள் இருடிகள் மட்டும் ஓதுவதற்குரிய இருடி வேதம், **இருக்கு வேதம்** என்ற ஒன்றை உண்டாக்கினார்கள். இதனை ஏற்கனவே குறிப்பிட்ட முனிவர்கள், இருடிகள், கருக்கள், தருக்கள், ... எனப்படுபவர்கள் காடுகளில் தங்கி ஓதி அருட்பயன்களை அடைவது மரபு. [இருடி என்பது 48 வகைப்படும்]. ஆனால், பிறமண்ணினரான பிருமணர்கள் பதினெண்சித்தர்கள் உருவாக்கிய மெய்யான இந்துமதத்தைக் கெடுக்கவும், அதன் அருட்பயன்களைத் தடுக்கவும் திட்டமிட்டு இந்த இருடிகளுக்குரிய இருக்கு வேதத்தை தங்களின் சமசுகிருதத்தில் *ரிக் வேதம்* என்ற பெயரில் ஒரு கற்பனாவாத, பயனற்ற குப்பை வாசகங்களை எழுதி வைத்துக் கொண்டு இந்துக்களைத் திசை திருப்பி அருளுலகில் நலிவும், மெலிவும், தாழ்ச்சியும், வீழ்ச்சியும் அடையச் செய்து விட்டனர்.

இதேபோலத்தான் பதினெண்சித்தர்கள் அசுர சித்திகளைப் பெறக் கூடிய வேதமாக உண்டாக்கிய **அசுர வேத**த்தை பிறமண்ணினரான பிருமணர்கள் *யஜூர் வேதம்* என்று தங்களுடைய மொழியில் உருவாக்கிய போலி வேதத்தால் செயலிழக்கச் செய்தார்கள். பதினெண்சித்தர்கள் இரவில் மட்டும் அதாவது சாமத்தில் மட்டும் [சாமம் = யாமம்] கூறக் கூடிய '**சாம வேதம்**' என்று வழங்கியதைப் பிறமண்ணினரான பிருமணர்கள் போலியாக உண்டாக்கிய '*ஸாம வேதம்'* என்பதன் மூலம் செயலிழக்கச் செய்தார்கள். பதினெண்சித்தர்கள் தாங்கள் அருளாட்சி செய்யும் அண்ட பேரண்டங்கள் இயங்கும் வானவெளியில் செயல்படுவதற்குரிய

வேதமாகப் படைத்த ‘**அதர்வான வேத**த்தை’ [வானத்தையே எல்லையாகக் கொண்டது இஃது. அதர் = எல்லை]. பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களின் சமசுகிருத மொழியில் உண்டாக்கிய போலியான ‘*அதர்வண வேதம்*’ என்பதன் மூலம் செயலிழக்கச் செய்தார்கள்.

இப்படி **மெய்யான இந்துமதத்தை** பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களின் சமசுகிருத மொழியின் மூலம் சிதைத்துச் சீரழித்துச் செயலிழக்கச் செய்து உருவாக்கிய பயனற்ற, தேவையற்ற, மாயமான, ஆபாசமான, அநாகரீகமான, மோசமான, மோசடியான மதம்தான் *பொய்யான இந்துமதம் எனும் ஹிந்து மதம்*. இப்படி இந்த இரண்டு மதங்களின் தோற்ற, மாற்ற, ஏற்ற மாறுபாடு, வேறுபாடு, முரண்பாடு, திரிபு, ... முதலியவைகளை எல்லாம் வரலாற்றுப் பூர்வமாகவும், தத்துவ ரீதியாகவும், இலக்கியப் பின்னணியோடும் அறிவிக்கப் பட்டு மக்கள் அறிந்து கொண்டால்தான் இந்து மறுமலர்ச்சிப் பணி அணி பெறும்; வெற்றி பெறும்; பயன் பெறும்; நன்மை நல்கும்.

இவற்றை எண்ணித்தான் வடஆரிய மாயைகளை, சமசுகிருத இலக்கியத் திருட்டுக்களை, குழப்பங்களை, கலகங்களை, வேதமத புரட்டுக்களை, பொய்களை, கற்பனைகளை, கனவுகளை, ஆபாசங்களே, மோச நாசங்களை, மோசடிகளை, ..... மிகமிகத் தெளிவாகவும், விளக்கமாகவும், முறையாகவும், நிறையாகவும் பேச்சாலும், எழுத்தாலும், செயலாலும் விளக்கும் பணி துவங்கி இருக்கிறது.

இதனைப் புரிந்தும் புரியவைத்தும் விருப்பத்தோடு எல்லாவிதமான ஆதரவுகளையும் வழங்கும் நிலை வளர்ந்தால்தான் இந்து மதத்துக்கு வருங்காலமுண்டு. இல்லையேல் இது மாற்று வேதங்களாலும், வேற்று மதங்களாலும், நாத்திகர்களாலும், பகுத்தறிவாளர்களாலும், இந்துமத துரோகிகளாலும், விரோதிகளாலும் இந்துமதத்துக்கு வருங்காலமே இல்லாமல் இருண்ட நிலை ஏற்பட்டு விடக் கூடும். எனவே, இந்து மறுமலர்ச்சி இயக்கக் கருத்துக்களை அதாவது சித்தர் நெறிக்

கருத்துக்களைச் சாதாரண மறுப்பு, வெறுப்பு, எதிர்ப்புக் கருத்தாக நினைக்க வேண்டாம். அதாவது சித்தர் நெறிச் செயல்வீரர்களும், வீராங்கனைகளும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் மூலம் **மெய்யான இந்துமத**த்தைக் காக்கும் உயிர்ப் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த உயிர்ப் போராட்டம் உயர் போராட்டமாக இருந்தும், வளவளர்ச்சியோ, வலிமைப் பொலிவோ, ஆட்சிச் செல்வாக்கோ பெற முடியாமல் இருப்பதற்கு காரணம் இன்றுள்ள இந்துக்களுக்கு '**மெய்யான இந்துமத**த்திற்கும், *பொய்யான ஹிந்துமதத்*திற்கும் உள்ள வேறுபாடு தெரியாததால்தான்'. மேலும், இன்றுள்ள இந்துக்கள் பிருமணத் தலைவர்களையே இந்துமதத் தலைவர்களாக நினைக்கிறார்கள். பிருமண மொழியான சமசுகிருத மொழியையே இந்துமத அருளாட்சி மொழியாகக் கருதுகிறார்கள். பிருமண வடஆரிய வேத மத சாத்திறச் சம்பிறதாயங்களையும், சடங்குகளையும், பூசாவிதிகளையும், மந்திரங்களையுமே இந்துமத மந்திரங்கள் என்று நம்பி விரும்பியேற்றுச் செயல்படுகிறார்கள்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, பல அரைகுறை மதச் சீர்திருத்த வாதிகள் பகுத்தறிவின் பெயரால் பிருமணரின் வேதமதமான *பொய்யான ஹிந்துமதத்*தின் புராண இதிகாச சாத்திறச் சம்பிறதாயச் சடங்குக் குப்பைகளை மெய்யான இந்துமதத்துக்குரியது என்றெண்ணி தேவையற்ற போராட்டத்தில், வெறுப்புப் பணியில், மறுப்புப் பணியில், எதிர்ப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். அதாவது, சமசுகிருத வெறுப்பு, பிருமண வெறுப்பு, மூடநம்பிக்கை வெறுப்பு, பழமை வெறுப்பு, மத வெறுப்பு, ... முதலிய உணர்ச்சிகளெல்லாம் உலக வரலாறு, இந்திய வரலாறு, தமிழ்மொழி வரலாறு, தமிழின வரலாறு, மெய்யான இந்துமத வரலாறு முதலியவைகளை முறையாகவும், நிறையாகவும் தெரியாதவர்களால் நிகழ்த்தப் படுவதால் தமிழுக்கும், தமிழினத்துக்கும், அருளுலகுக்கும் மிகமிகப் பெரிய பாதிப்புக்களை

ஏற்படுகின்றன. எனவேதான், **இந்து மத**த்தையும், *ஹிந்து மதத்*தையும் பிரித்து வேறுபடுத்தி விளக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

## வேதங்களும் - இந்து - *ஹிந்து* மதங்களும்

பதினெண்சித்தர்கள் உருவாக்கிய நான்கு வேதங்களின் பெயர்களிலும் நான்கு சமசுகிருத வேதங்களை உருவாக்கிக் கொண்ட பிருமணர்கள் முழுக்க முழுக்க தங்களுடைய வேத மதத்தை; அதாவது, *பொய்யான ஹிந்து மதத்தை* மெய்யான இந்து மதமாகவே மாற்ற முயற்சித்தார்கள். அதற்காக பதினெண்சித்தர்கள் ஏற்படுத்திய வழிபடு நிலையினர்கள், வழிபாட்டு நிலையங்கள், பல்வேறு வகை அருளாளர்கள், பலவகைப் பட்ட அருளுலக நூல்கள், ... முதலிய அனைத்தையுமே இருட்டடிப்புச் செய்யவும், குழப்பவும், கலக்கவும் பல புதிய கதைகளையும், புராண இதிகாசங்களையும், போலி நூல்களையும், போலி வரலாறுகளையும் உருவாக்கினார்கள். இதனால்தான், அவர்கள் தங்கள் முயற்சியில் வெற்றி பெற்றார்கள்.

மேலும் இம்மண்ணுலகின் முதல் இனமாகவும், மூத்த இனமாகவும் இருக்கின்ற தமிழினம் மிக எளிதில் பிறருக்கு ஆதரவும், உதவியும், பாதுகாப்பும், மதிப்பும் வழங்கக் கூடிய பண்பு உடையது என்பதனால் பிருமணர்கள் மிக எளிதாக இந்து சமயத்திலும், சமுதாயத்திலும் முதன்மையான தலைமையிடத்தைப் பெற்றுக் கொண்டு விட்டார்கள். இவற்றின் மூலம் ஆட்சியிலிருப்பவர்களை எப்போதும் தங்களுடைய ஆதரவாளர்களாகவே இருக்கும்படிச் செய்து விட்டார்கள். எனவேதான், பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எவ்வளவோ முயன்றும் கூட நாடு தழுவிய வெற்றிகளைப் பெற முடியவில்லை. பெற்ற வெற்றிகளைப் பொதுமக்கள் புரிந்து விரும்பி நம்பி ஏற்றுப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

இவற்றையெல்லாம் முழுமையாக எண்ணிப் பார்த்த சித்தர் கருவூரூர் வழி வந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளையவர்கள் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே தோற்றுவித்த இந்து மறுமலர்ச்சி இயக்கமும், அதன் கிளை

அமைப்புக்களும் பொருத்தமான, திருத்தமான கருத்துப் புரட்சியை விளைவிக்கும் பணியில் மட்டுமே ஈடுபட்டுள்ளன. அப்பணியின் தொடர்ச்சியாகவே நுட்ப திட்ப ஒட்பத்துடன் இந்த கருத்து விளக்கக் கட்டுரையும் அமைகிறது.

பதினெண்சித்தர்கள் இந்து மதத்தின் செல்வங்களாக நான்மறைகள், நான்முறைகள், நாநெறிகள், நான்வேதங்கள் என்ற பதினாறையும் உருவாக்கினார்கள். இவை இந்துமதத்தின் இயக்குநர்களாக, ஆளுநர்களாக, அரசர்களாக, வழிகாட்டிகளாக, ... விளங்கக் கூடியவர்களுக்கு மட்டுமே பயன்படும். சாதாரணமாக இந்து மதத்தைச் செயலாக்கக் கூடிய (48) நாற்பத்தெட்டு வகையினருக்கும் அருள்மறைகள் 48, பொருள் மறைகள் 64, அருள் முறைகள் 48, பொருள் முறைகள் 64, அருள் நெறிகள் 48, பொருள் நெறிகள் 64, அருள் வேதங்கள் 48, பொருள் வேதங்கள் 64 என்று படைத்தார்கள்.

இதேபோல், மனிதனைப் படிப்படியாகப் பக்குவப் படுத்தி கடவுள் என்ற பொதுச் சொல்லால் குறிக்கின்ற 48 வகையான வழிபடு நிலையையும் [அல்லா, அத்தா, அம்மையப்பர், ஆண்டவர், இறைவர், கடவுள், தெய்வம், பட்டவர், தேவியர், தேவதை, தேவர், அமரர், ...] பெறுவதற்காக ஏட்டுக் கல்வியையும், குருவழிப் பயிற்சிக் கல்வியையும் உருவாக்கினார்கள். இவற்றிற்காக எண்ணற்ற அத்திற, சாத்திற, தோத்திற, நேத்திறங்களையும்; நேம, நியம, நிடத, நிட்டைகளையும்; சுருதி, ஆரண, ஆகம, மீமாம்சைகளையும்; மந்தர, மந்திர, மந்திற, மாந்தர, மாந்தரீகங்களையும்; தந்தர, தந்திர, தந்திற, தாந்தர, தாந்தரீகங்களையும்; எந்திர, எந்திற, எந்தர, ஏந்தர, ஏந்தரீகங்களையும், ..... வகைவகையாகப் படைத்திருக்கிறார்கள் பதினெண்சித்தர்கள்.

இவையனைத்தையும் இருட்டடிப்புச் செய்து ஏமாற்றுவதற்காகவே பிராமணர்கள் அவர்களுடைய *ஹிந்து மதத்திற்*குரிய பிரம்மனின் கதையை எழுதியிருக்கிறார்கள். '*கலைவாணியை உருவாக்கிய பிரம்மன்*

*கலைகளையும், சாஸ்திரங்களையும் படைக்க விழைந்தான். அவனது நான்கு முகங்களிலிருந்து, ரிக், யஜீர், ஸாம, அதர்வணம் ஆகிய நான்கு வேதங்கள் பிறந்தன. பிறகு தனுர் வேதம், காந்தர்வ வேதம், விஸ்வகர்ம வேதம் முதலியன உதித்தன'* என்று கூறுகின்றனர்.

பதினெண்சித்தர்கள் இந்த மண்ணுலகம் ஒரு நூறு கோடியாண்டுக் காலம் நெருப்புக் கோளமாக இருந்த பிறகு, ஒரு நூறு கோடியாண்டுக் காலம் பனிக்கட்டியாக இருந்தது என்றும்; அதன் பிறகே ஒரு நூறு கோடியாண்டுக் காலம் நீராக இருந்தது என்றும்; பின்னரே ஒரு நூறு கோடியாண்டுக் காலத்தில் கல்லும், மண்ணும் தோன்றியதென்றும்; இறுதியாக ஒரு நூறு கோடியாண்டுக் கால இடைவெளியிலே பயிரினங்களும், உயிரினங்களும் தோன்றினவென்றும்; இந்த மண்ணில் தோன்றிய அனைத்துப் பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் ஈசர்களாக அதாவது தலைவர்களாக, மணீசர்கள் தோன்றினார்கள் என்றும்; அவர்களைப் பண்படுத்துவதற்காகவே **இந்துமதம்** இன்றைக்கு (2014ஆம் ஆண்டுக் கணக்கின்படி) 43,73,115 ஆண்டுகளுக்கு முன்னால் வழங்கப் பட்டது என்றும் மிகத் தெளிவாகக் கூறுகிறார்கள்.

அதாவது, பதினெண்சித்தர்கள் மிகத் தெளிவாக விஞ்ஞானச் சூழலிலும், பகுத்தறிவுப் போக்கிலும், (With a Scientific atmosphere and a Rationalistic Approach) உலகின் தோற்றத்தையும், பயிரின உயிரின தோற்றத்தையும் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட பகுத்தறிவுப் போக்கும், விஞ்ஞானச் சூழலும் உடையதுதான் **சித்தர்களின் இந்து மதம்**. அதாவது, **மெய்யான இந்துமதம்** என்று சொல்லப் படும் **பதினெண்சித்தர்களின் இந்துமதம்** முழுக்க முழுக்க அன்றாட நடைமுறை வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய ஒரு சமூக விஞ்ஞானமே; இது ஒரு பகுத்தறிவுத் தத்துவமே; இது ஓர் அறிவியல் மதமே. ஆனால், *வடஆரியர்களின் ஹிந்துமதம்* காட்டு மிராண்டித் தனமான கற்பனைகளையும், ஆபாசங்களையும், பொய்களையும், பயனற்றவைகளையும், தேவையற்றவைகளையும் மிகுதியாக

உடைய ஒன்று. இப்பேருண்மையினை ஹிந்து மதத்தின் அதாவது பிரும்மண வேத மதத்தின் கருத்துக்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**உலகம் பற்றியும் உயிரினம் பற்றியும் *ஹிந்து மதம்* கூறுவன**

*'பிரம்மன் தன்னால் தோற்றுவிக்கப் பட்ட மானஸ புத்திரர்களால் சிருஷ்டித் தொழில் நடக்காததால் பிரம்மனே ஸ்வயம்பு மனு எனும் ஆணாகவும், ஸத்ரூபை எனும் பெண்ணாகவும் உருவெடுத்து மனித இனத்தை உருவாக்கினான். இவ்வாறு சிருஷ்டி தொடங்கியது'* - இப்படி அறிவுக்குப் புறம்பான கற்பனைக் கட்டுக் கதைகளைக் கூறுகிறது *பிரும்மணர்களின் பொய்யான ஹிந்துமதம்.*

## முடிவுரை:-

விரிவஞ்சி இக்கட்டுரையை இத்துடன் நிறைவு செய்ய நேரிடுகின்றது. அதாவது இன்றைய 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களுக்குக் கிடைக்கின்ற ஓய்வு நேரத்தை இதற்கு மேல் செலவழிக்க அவரால் இயலாது. எனவே, இக்கட்டுரையிலுள்ள கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு சித்தர் நெறி அடியானும், அடியாளும், அடியாரும் சிந்தித்துப் பல கட்டுரைகளையும், நூல்களையும் எழுத வேண்டும் என்று அறிவிக்கப் படுகிறது.

குருதேவர் தரும் செய்திகள் அனைத்தும் சிந்தனையைத் தோற்றுவித்து ஊக்குவிக்கும் ஆற்றலுடையவையே! (Our Gurudevar's ideas are thought provoking) என்பதை அனைவரும் மெய்யாக்க வேண்டும். தலைவர் என்பவர் அறிவுணர்ச்சி ஊற்றாகக் (The Spring of Inspiring Ideas) கருத்துக்களை வழங்கிக் கொண்டே இருந்தால்தான் எங்கும் கொள்கை செழித்துக் கொழித்துப் பசுமையாக வளர்ச்சி பெற முடியும்.

நாம் வரலாற்றுப் பூர்வமாகவும், இலக்கியப் பூர்வமாகவும், தத்துவப் பூர்வமாகவும் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் **இந்து மத**த்துக்கும் *ஹிந்து மத*த்துக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கி உரைக்க வேண்டும். சொற்பொழிவாற்ற வேண்டும்; புத்தகமாக அச்சிட்டு வழங்க வேண்டும். இல்லாவிட்டால், நம்மால் எதுவுமே செய்ய முடியாது. நம்மை நாத்திகர்களும் இருட்டடிப்புச் செய்து, எதிர்த்தழிக்கப் பார்க்கிறார்கள். *பொய்யான ஹிந்து மத*த்தை நம்பியேற்று நம்மை இருட்டடிப்புச் செய்தும் அழித்தொழிக்கப் பார்க்கிறார்கள். தன்னல வெறி பிடித்த சமய, சமுதாய, கலை, இலக்கிய, அரசியல்வாதிகள் *போலியான ஹிந்து மத*த்தின் மூலம் மக்களை மடையர்களாகவும், தன்மானம் அற்றவர்களாகவும், தன்னம்பிக்கை அற்றவர்களாகவும், ஒற்றுமை இல்லாதவர்களாகவும், சிந்தனை இல்லாதவர்களாகவும், எவ்விதமான மொழிப்பற்றோ, நாட்டுப் பற்றோ பெற்று விட முடியாதவர்களாகவும், கோழைகளாகவும், ஏமாளிகளாகவும், அடிமைகளாகவும் தயாரித்துத் தாங்கள் சுக வாழ்வு வாழுகிறார்கள். எனவே, இன்றுள்ள சமய, சமுதாய, கலை, இலக்கிய, அரசியல் தலைவர்கள் அனைவருமே நம்மைத் தாழ்த்தவும், வீழ்த்தவும், இழிக்கவும், அழிக்கவும், இருட்டடிப்புச் செய்யவும், பிறமணர்களோடு சேர்ந்து செயல்படுபவர்களாகவே இருக்கிறார்கள். எனவேதான், நமது உடனடி முயற்சியாக **மெய்யான இந்துமத**த்துக்கும், *பொய்யான ஹிந்துமத*த்துக்கும் உள்ள வேறுபாடுகள் விளக்கி உரைக்கப் பட்டு வருகின்றது.

//உண்மை நகல்//

//இந்தக் கட்டுரை 'குருதேவர்' அறிக்கை 18, 19, 21, 22, 23, 24, 25, 26 ஆகிய எட்டு இதழ்களில் தொடர் கட்டுரையாக வெளியிடப் பட்டுள்ளது.//

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'

**காலம்:** பதினெண் சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சீவாலயங்கள்

**இந்துமத நூல்கள்:** 108 பூசை மொழி நூல்கள்,
48 பூசைவிதி நூல்கள்
96 தத்துவ நூல்கள்
144 செயல் சித்தாந்த நூல்கள்
36 குருபீட நூல்கள்

ஆக மொத்தம் 432 நூல்கள்

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

***இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்***

***அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.***

***அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.***

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்

தமிழே கடவுள் மொழி! தெய்வ மொழி!, தேவ மொழி!, வேத மொழி!



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினர்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
at Sri Vignesh Printers, Madurai.

www.books.gurudevar.org Email: indhuism@gmail.com